/

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029486

1. District : மாவட்டம் அரியலூர்   PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு   Year: ஆண்டு 2019   FIR No.: மு.த.அ. எண் 01/19   Date: நாள் 19.02.2019

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended   Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: by P.C.Act (Amendment)   Sections பிரிவுகள்: as amended by PC Act
(iii) Act சட்டம்: 2018.   Sections பிரிவுகள்: (Amendment) 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 18.02.2019   Date from : நாள் முதல் 18.30 hrs   Date to : நாள் வரை 23.00 hrs
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.02.2019   Time : நேரம் 12.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி நட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், ஆண்டிமடம் ஆண்டிமடம் தாலுகா, அரியலூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. கி. சத்யவதி   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பா. தங்கமணி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட தலைமை ஆய்வுக்குழு அலுவலர்,   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

S01. திருமதி. J. சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், ஆண்டிமடம்.
S02. திரு. K. செல்வமுருகன், இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம்
S03. திரு. M. உமாசங்கர், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம் ஆண்டிமடம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தகவல் கொடுப்பதில் தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது** இன்று 19.02.2019 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு அரியலூா் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளா் க.ரமேஷ் குமாா் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.தி.சத்யபாமா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலா், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூா் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி என்பவா் என்முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல் திருமதி.தி.சத்யபாமா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலா், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூா் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி. பெறுதல் காவல் ஆய்வாளா் அவா்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, அரியலூா். ந.க.எண்.50/2019/அ1, நாள் 19.02.2019. அய்யா, பொருள் அரியலூா் மாவட்டம், ஆண்டிமடம் தாலுக்கா, ஆண்டிமடம் சாா்பதிவாளா் அலுவலகம் - 18.02.2019 அன்று அரியலூா் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளா் அவா்களுடன் திடீா் சோதனை மேற்கொண்டது - மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி புகாா் கொடுத்தல் - தொடா்பாக. பாா்வை திடீா் சோதனை செயல்முறைகள் நாள் 18.02.2019. அரியலூா் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 18.02.2019 ஆம் தேதி மாலை 16.30 மணியளவில், அரியலூா் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து காவல்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..........—.......... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளா் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 19/2/2019

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 19.2.2019

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.02.2019

Name: பெயா் G. RAMESH KUMAR
Rank: நிலை காவல் ஆய்வாளா், ஊ.த.க. பிரிவு, அரியலூா் No. எண் .........

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 1/2019 வழக்கின் தொடர்ச்சி** :-

ஆய்வாளர் திரு.க.ரமேஷ் குமார் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தாலுக்கா, ஆண்டிமடம் to விருத்தாச்சலம் செல்லும் மெயின்ரோட்டில் ஆண்டிமடம் வன்னியர்குல சத்திரியர் திருமண மாளிகை மண்டபம் எதிரில் உள்ள ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 18.02.2019 ஆம் தேதி மாலை சென்று திருமதி.J.சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் மற்றும் அங்கிருந்தவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு, ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தை 18.02.2019 ஆம் தேதி மாலை 18.30 மணிமுதல் இரவு 23.00 மணிவரை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.க.ரமேஷ்குமார் மற்றும் அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது கையூட்டு தொகையாக(Illegal gratification) கருதக்கூடிய ருபாய்.1,05,060/- ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்டு, அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு. அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தாலுக்கா ஆண்டிமடத்தில் ஆண்டிமடம் to விருத்தாச்சலம் செல்லும் மெயின்ரோட்டில் ஆண்டிமடம் வன்னியர்குல சத்திரியர் திருமண மாளிகை மண்டபம் எதிரில் உள்ள ஆண்டிமடம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவுகள் செய்வதற்கு ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொதுமக்களிடம் கையூட்டு பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 18.02.2019 ஆம் தேதி மாலை 18.30 மணிக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் ஆண்டிமடம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகமானது ஆண்டிமடம் தாலுக்கா ஆண்டிமடத்தில் தெற்கு வடக்காக ஆண்டிமடம் to விருதாச்சலம் செல்லும் மெயின்ரோட்டில் ஆண்டிமடம் வன்னியர்குல சத்திரியர் திருமண மாளிகை மண்டபம் எதிர் புறம் மெயின்ரோட்டிற்கு கீழ்புறம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகமானது சுற்றிலும் மதிர்சுவருடனும் வடக்குபக்கம் மதிர்சுவர் சிறிது இல்லாமலும் கம்பிவேலியுடனும் உள்ளது, சார்பதிவாளர் அலுவலகமானது இரும்பு கதவுகளுடன் கூடிய நுழைவுவாயிலுடன் கூடியதாகவும், நுழைவு வாயிலுக்கு அருகில் ஒட்டு கட்டிடம் அதனுள்ளே டேபிள் சேர் மற்றும் பொது மக்கள் அமரக்கூடிய சிமெண்ட்சிலாப் உள்ளது. சார்பதிவாளர் அலுவலக கட்டிடமானது தரை தளம் மட்டும் கொண்டதாகவும், சார் பதிவாளர் அலுவலக கட்டிடத்தின் நுழைவு வாயில் கிரில்

கேட்டுடன் கூடிய முன்வராண்டாவும், அதனை அடுத்தார்போல் சார்பதிவாளரின் இருக்கையுடன் கூடிய ஹால் மற்றும் அதனுடன் இணைந்த கணினி அறை மேற்கு பக்கம் அமைந்துள்ளது, அதே ஹாலின் கிழக்கு பக்கம் இளநிலை உதவியாளரின் அறையும், ஹாலின் வடக்கு பக்கம் ஆவணங்கள் அறையுமாக ஆண்டிமடம் சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலக ஹாலில் சார்பதிவாளர் இருக்கை பெரிய டேபிளுடன் கூடிய இருக்கை அதில் திருமதி.J.சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் அவர்கள் அமர்ந்திருந்தார். சார்பதிவாளரின் இருக்கைக்கு வலதுபுறம் உள்ள டேபிள் அலுவலக உதவியாளர் திரு.M.உமாசங்கர் அவர்கள் அமர்ந்திருந்தார். சார்பதிவாளருக்கு எதிரே உள்ள டேபிளில் Elcot ஊழியர் திரு.K.விஜயமூர்த்தி என்பவர் பத்திரங்களில் அலுவலக முத்திரையிட்டு கொண்டிருந்தார். சார்பதிவாளர் அறைக்கு கிழக்கு பக்கம் உள்ள இளநிலை உதவியாளர் அறையில் இளநிலை உதவியாளர் திரு.K.வேல்முருகன் அமர்ந்திருந்தார். சார்பதிவாளரின் இடதுபுறம் திரு.V.ஆனந்தன், வயது.**49/2019**, த/பெ.வடிவேல், தேவாங்கிதெரு, விளந்தை ஆண்டிமடம் என்பவர் நின்று கொண்டிருந்தார். மேற்படி ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். நான் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொண்டபோது கீழ்கண்டவாறு பணம் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் விலாசம் | ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.K.வேல்முருகன், இளநிலை உதவியாளர் அவர்களிடம் இருந்த பணம் | 40 |
| 2 | திரு.S.ரவி, வயது.**45/2019**, த/பெ.சுப்பிரமணியன், அய்யூர், தெற்கு நத்தம், ஆண்டிமடம் தாலுக்கா என்பவரிடம் இருந்த பணம் | 38,000 |
| 3 | திரு.N.பாரிவள்ளல், வயது.**48./2019**, த/பெ.நாகப்பன், தெற்குதெரு, ஆண்டிமடம் என்பவரிடம் இருந்த பணம் | 26,000 |
| 4 | திரு.L.ஆறுமுகம், த/பெ.லெட்சுமணன், கன்னிகோயில் தெரு, பெரியார் நகர், காட்டு மன்னார்கோவில், கடலூர் என்பவரிடம் இருந்த பணம் | 170 |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணம் அவர்களது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர்களிடம் அந்த பணம் என்னால் திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்

பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தையும் அலுவலகத்தை சுற்றியுள்ள பகுதிகளையும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை செய்த போது கீழ்கண்ட விபரப்படி சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்களால் கணக்கில் கூற இயலாத பணம் இருந்தது தெரியவந்தது. அந்த தொகையானது யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,05,060/-ம் திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ. எண் | கைப்பற்றப்பட்ட இடம் | ரூபாய் |
|---|---|---|
| 1 | சார்பதிவாளர் டேபிளுக்கு எதிரே உள்ள டேபிளின் மீது இருந்த பணம் | 60,400 |
| 2 | சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.வேல்முருகன் என்பவரின் டேபிளின்மீது இருந்த பணம் | 8,660 |
| 3 | சார்பதிவாளர் அலுவலக வளாகத்தில் நின்றிருந்த திரு.உமாசங்கர், அலுவலக உதவியாளர் என்பவருக்கு சொந்தமான TN46 R 7188 என்ற Maruthi Swift வாகனத்தில் இருந்த பணம் | 36,000 |
| | மொத்தம் ரூபாய் | **1,05,060** |

ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த வெளி நபர்கள் என்னால் விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், திடீர் சோதனையில் கணக்குகூற இயலாத கையூட்டு பணமாக கருதக்கூடிய **ரூபாய்.1,05,060/**-மற்றும் கீழ்கண்ட 3 ஆவணங்கள் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

| | |
|---|---|
| 1 | ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு |
| 2 | ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் தனி உறையில் பதிவேடு |
| 3 | 18.02.2019 தேதி ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரம் மற்றும் பெறப்பட்ட பற்று தொகை அடங்கிய கோப்பு. |

ஆண்டிமடம் சார்பதிவாளர் பிரதான கட்டிடத்தின் கிழக்குபக்கம் ஒட்டினார்போல் Maruthi Swift Tour(for registration)கார் ஒன்று பூட்டிய நிலையில் இருந்ததினை சோதனை செய்ய இயலாததால் அவ்வாகனத்தின் உரிமையாளர் ஆவண எழுத்தர் திரு.K.ராமதாஸ் அவர்களை வரவழைத்து, வாகனத்தினை திறந்து சோதனையிட்டதில் எதுவும் கைப்பற்றபடவில்லை. மேலும் அந்த வாகனத்தை திரு.K.ராமதாஸ், ஆவண

எழுத்தர்(C2/2000) அவர்கள் திருமதி.J.சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர் அவர்களை அவரது வீட்டில் விடுவதற்கு மேற்படி Maruthi Swift Tour TN 61 Q 6621 பயன்படுத்துவதாக தெரிவித்ததால் திரு.K.ராமதாஸின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. மேற்படி அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட கணக்குகூற இயலாத பணம் ரூபாய்.1,05,060/- பற்றி திருமதி.J.சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், திரு.K.வேல்முருகன், இளநிலை உதவியாளர், திரு.M.உமாசங்கர், அலுவலக உதவியாளர் மற்றும் திரு.K.விஜயமூர்த்தி Elcot ஊழியர் ஆகியோரிடம் விளக்கம் கேட்க சரியான விளக்கம் அளிக்கவில்லை. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும், பதிவுத்துறை தலைவர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 43029/ஆ3/2011-2, நாள் 11.10.2011-ன்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பணிக்கு வரும்போது தாங்கள் கொண்டுவரும் கையிருப்பு பணத்தை அலுவலகத்தில் உள்ள தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து பணிசெய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்தோ, அவர்களது இருக்கையிலிருந்தோ பணம் கைப்பற்றப்பட்டால் அந்த தொகை Illegal gratification (கையூட்டு) எனக் கருதப்படும். 18.02.2019 ஆம் தேதி ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட 1)சார்பதிவாளர் டேபிளுக்கு எதிரே உள்ள டேபிளின் மீது இருந்த ரூபாய் 60,400/-, 2)சார்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.K.வேல்முருகன் என்பவரின் டேபிளின்மீது இருந்த ரூபாய் 8,660/- மற்றும் சார்பதிவாளர் அலுவலக வளாகத்தில் நின்றிருந்த திரு.உமாசங்கர், அலுவலக உதவியாளர் என்பவருக்கு சொந்தமான TN46 R 7188 என்ற Maruthi Swift வாகனத்தில் இருந்த ரூபாய் 36,000/- ஆக மொத்தம் ரூபாய் 1,05,060/- ஆனது, தனிநபர் பண கையிருப்பு பதிவேட்டுடன் சோத்து ஆய்வு செய்தபோது, இரண்டிற்கும் முரண்பாடாக இருப்பது தெரியவந்தது. மேலும் ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் தனி உறையில் பதிவேடு சரியாக பராமரிக்கப்படாமலும், **12.02.2019** ஆம் தேதிக்கு பிறகு பதிவுகள் ஏதும் இல்லாமல் உள்ளது. எனவே மேற்படி தொகை ரூபாய் 1,05,060/-ம் லஞ்சத் தொகையாக கருதப்படுவதால் அதன்மீது பூர்வாங்க விசாரணை செய்து மேற்படி 1)திருமதி.J.சுமதி, உதவியாளர், பொறுப்பு சார்பதிவாளர், ஆண்டிமடம், 2)திரு.K.வேல்முருகன், இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஆண்டிமடம் மற்றும் 3)திரு.M.உமாசங்கர், அலுவலக உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஆண்டிமடம் ஆகியோர்மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 18.02.2019 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள(ஒப்பம் தமிழில்) **தி.சத்யபாமா,19/2/2019.** மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி. இணைப்பு 1.திடீர் சோதனை

செயல்முறைகள் நாள் 18.02.2019. 2.ரொக்கம் ரூபாய் 1,05,060/- மற்றும் இதர ஆவணங்கள். பணிந்து சமர்பிக்கப்படுகிறது. அய்யா, நான் இன்று 19.02.2019 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்டக்கருத்துரை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.01/2019, சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 19.02.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை வாதியின் புகார் மனுவையும் இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 19.02.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.